தினமணி

# உணவுப் பணவீக்க உயர்வு தாற்காலிகமானதே

**புது தில்லி, ஜூலை 16:** உணவுப் பணவீக்க உயர்வு தாற்காலிகமானது என்று மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார். இதனால் உணவுப் பொருள்களின் விலை உயரும் என அஞ்சத் தேவையில்லை என்றும் கூறினார்.



ஜூலை 3-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவுப் பணவீக்க விகிதம் 12.81 சதவீதமாக உயர்ந்தது. முந்தைய வாரத்தில் இது 12.63 சதவீதமாக இருந்தது. தற்போது 0.2 சதவீதம் உயர்ந்துள்ளது. இது தாற்காலிகமானதே. தற்போது உணவுப் பொருள்களின் விலை உயர்வதற்கான வாய்ப்பு இல்லை என்று அவர் கூறினார். வெள்ளிக்கிழமை இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தில் விருது வழங்கும் விழாவில் அவர் பேசியது:

நாட்டின் உணவுப் பணவீக்கம் 18 சதவீதம் முதல் 19 சதவீதம் வரை இருந்தது. இது படிப்படியாகக் குறைந்து தற்போது 13 சதவீதத்துக்குள் உள்ளது. தில்லியில் காய்கறிகளின் விலை சமீபத்தில் உயர்ந்துள்ளது. பஞ்சாப் மற்றும் ஹரியாணாவில் பெய்த கடும் மழைதான் இதற்குக் காரணமாகும். உணவுப் பொருள்களின் விலைகள் குறையத் தொடங்கியுள்ளன.

உணவுப் பணவீக்கம் 0.2 சதவீதம் உயர்ந்ததற்கு திடீர் மழை காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து பாதிப்பு மற்றும் பெட்ரோல் விலை உயர்வு காரணம் என பொருளாதார நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். கடந்த இரண்டு வாரங்களாக குறைந்து வந்த உணவுப் பணவீக்கம் தற்போது உயர்ந்ததற்கு இதுவும் காரணமாகும்.

செப்டம்பரில் குறுவை சாகுபடி முடிந்து உணவுப் பொருள்கள் சந்தைக்கு விற்பனைக்கு வரும்போது அவற்றின் விலை குறையும் என்று நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்க்கரை விலை குறைந்துள்ளதால் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்படுமா? என்று கேட்டதற்கு, இதுகுறித்து ஆகஸ்ட் இறுதியில் முடிவு செய்யப்படும் என்றார் பவார்.

தினமலர்

**குறைகேட்பு கூட்டத்தில் விவசாயிகள் வாக்குவாதம்**

விழுப்புரம் : குறைகேட்பு கூட்டத் தில் டி.ஆர்.ஓ.,வுடன் விவசாய சங்க பிரதிநிதிகள் வாக்குவாதம் செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் டி.ஆர்.ஓ., வெங்கடாசலம் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் விவசாயிகள் சங்க பிரதிநிதி ராஜேந்திரன் பேசுகையில், பட்டா மாற்றம் கோரி மனு செய்து 10 ஆண்டுகளாகியும் நடவடிக்கை இல்லை என்றார்.

டி.ஆர்.ஓ.,வெங்கடாஜலம் பதிலளிக்கையில், முறையான ஆவணங்கள் அளித்தால் பட்டா மாற்றம் செய்து தரப்படும் என்றார்.

விவசாயிகள் சங்க பிரதிநிதி ரவிநயினார் குறுக் கிட்டு, 10 ஆண்டுகளாக பட்டா மாற்றம் கேட்டு உரிய முறையில் மனு கொடுத்தும் பலனில்லை என்றார்.

இதையடுத்து கடந்த ஒரு மாதத்தில் தாலுகா வாரியாக வழங்கிய பட்டா மாற்றம் குறித்து டி.ஆர்.ஓ., பட்டியலிட்டார். விவசாய சங்கத்தினர் தவறான புகார்களை தெரிவிக்கக் கூடாது என்றார்.

உடனே ரவி நயினார், ராஜேந்திரன் இருவரும் எழுந்து, உரிய ஆவணங்களுடன் மனு செய்த எங்களுக்கு பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என கேள்வி எழுப்பினர். உரிய ஆவணங்களுடன் மனு கொடுக்குமாறு டி.ஆர்.ஓ., கூறினார்.

கடவம்பாக்கம் மணி பேசுகையில், சமூக நலத் துறை திருமண உதவித் தொகை தொடர்பாக பேச துவங்கினார். அப்போதும் ரவி நயினார் குறுக்கிட்டு, விவசாயிகள் பிரச்னையை மட்டும் பேசுமாறு கூறியதால் கடும்வாக்குவாதம் ஏற்பட்டது.

தமிழக விவசாயிகள் சங்க தலைவர் சத்துரு சிங் காரம் மற்றும் சுப்பராயன் உள்ளிட்ட சிலர் தங்க ளுக்கு பேச அனுமதி வழங் கவில்லை என கூறினர். கூட்டம் முழுவதும் கூச் சல், குழப்பம் நிலவியது

**பட்டுப்புழுக்களை கொல்லாமல் தயாரிக்கப்பட்ட பட்டு நூலில் தயாரான பட்டுச்சேலை அறிமுகம்**

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் எஸ்.கே.பி., பிரதர்ஸ் ஜவுளி நிறுவனம் பட்டுப் புழுக்களை கொல்லாமல் தயார் செய்யப்படும் அகிம்சா பட்டு நூலை பயன்படுத்தி தயார் செய்யப்பட்ட பட்டு சேலைகளை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர்.பட்டுச் சேலைகள் தயாரிப்பதற்காக ஆயிரக்கணக்கான பட்டுப்புழுக்கள் கொல்லப்படுகின்றன. ஒரு பட்டுச்சேலை உற்பத்தி செய்ய, சராசரியாக 600 கிராம் பட்டு நூல் தேவைப்படுகிறது.ஒரு கிராம் பட்டு நூல் எடுக்க 15 பட்டுப்புழுக்கள் கொல்லப்படுகின்றன. ஒரு பட்டு சேலை தயாராக 10 ஆயிரம் பட்டுப் புழுக்கள் வரை கொல்லப்படுகின்றன.இதனால் ஜெயின சமூகத்தை சேர்ந்தவர்கள் பட்டுச்சேலைகள் உடுப்பதில்லை. இந்நிலையில் ஆந்திர மாநிலத்தை சேர்ந்த

குசுமாராஜையா என்பவர் பட்டுப்புழுக்களை கொல்லாமலே, பட்டு நூல் தயாரிக்கும் முறையை கண்டறிந்தார்.பட்டுப்புழுக்கள் வளர்ந்து வண்ணத்து பூச்சிகளாக பறக்கும் வரை காத்திருந்து, பின்னர் வண்ணத்து பூச்சி விட்டுச்சென்ற கூட்டிலிருந்து பட்டு நூல் தயாரித்தார்.பட்டுப்புழுக்களை கொல்லாமல் தயாரித்த பட்டு நூலுக்கு அகிம்சா பட்டு நூல் எனப் பெயரிட்டார். அதற்கு காப்புரிமையும் பெற்றுள்ளார்.

அவருடன் காஞ்சிபுரம் எஸ்.கே.பி., பிரதர்ஸ் ஜவுளி நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன் உரிமையாளர்கள் பாலவெங்கடேசன், கோபிநாத் ஆகியோர் அகிம்சா பட்டு நூலை பெற்று, அதனுடன் ஜரிகை சேர்த்து அழகிய பட்டுச் சேலைகளை உருவாக்கியுள்ளனர்.முதன் முதலாக இரண்டு பட்டுச் சேலைகளை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர். இவற்றின் விலை முறையே 10 ஆயிரம் மற்றும் 16 ஆயிரம் ரூபாய்.இது குறித்து கோபிநாத் கூறியதாவது:பட்டுச்சேலையில் ஏதேனும் புதுமையை புகுத்த வேண்டுமென எண்ணினேன். அப்போது அகிம்சா பட்டு குறித்த தகவல் கிடைத்தது. அதற்கு காப்புரிமை பெற்றுள்ள ராஜையாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டேன்.தற்போது அவரிடமிருந்து பட்டு நூல் வாங்கி சேலைகளை உருவாக்கியுள்ளேன். இச்சேலைகள் ஆரணியில் உருவாக்கப்பட்டது.சாதாரண பட்டு சேலைகளை விட, அகிம்சா பட்டு பயன்படுத்தி சேலை உருவாக்க கூடுதலாக 15 நாட்களாகிறது. செலவும் 2 ஆயிரம் ரூபாய் வரை கூடுதலாகிறது.எனினும் அகிம்சையை விரும்பும் மக்களிடம் இப்பட்டுச் சேலைகளுக்கு வரவேற்பு கிடைக்குமென நம்புகிறோம். மேலும் இச்சேலைகளை அனைத்து தரப்பு மக்களிடமும் கொண்டு செல்ல முடிவு செய்துள்ளோம்.இவ்வாறு கோபிநாத் தெரிவித்தார்.

**விவசாய தொழில் பாதிப்பு: கட்டட தொழிலுக்கு மாறினர்**

திருத்தணி : போதுமான அளவு மழை பெய்யாததால், விவசாய தொழிலை துறந்து விவசாயிகள் கட்டட வேலைக்குச் செல்லும் நிலை உருவாகி வருகிறது.
திருத்தணி தாலுகாவில் 500க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு வசிக்கும் பெரும்பாலான மக்கள் விவசாய தொழிலை நம்பி தான் வாழ்கின்றனர். சிலர் மட்டும் பஜாரில் கடை வைத்து வியாபாரம் செய்து வருகின்றனர்.கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்து விட்டது. மேலும் இங்குள்ள கொற்றலை ஆற்றில் மணல் திருட்டு அதிகளவில் நடப்பதால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்தால், விவசாய கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து விட்டது.நீர் வசதி குறைந்து விட்டதால், நிலத்தில் நெல், கரும்பு, வேர்கடலை போன்ற பயிர்கள் சாகுபடி செய்ய முடியவில்லை. இதனால் வருமானமின்றி பலரும் தவித்து வருகின்றனர். பல விவசாயிகள் எந்த வேலையும் இல்லாமல் வீட்டில் முடங்கி கிடக்கின்றனர்.இந்நிலையில் சில விவசாயிகள் தங்களின் குடும்பத்தின் வறுமை காரணமாக கூலி வேலைக்கு சென்று அதில் வரும் பணத்தில் தங்களது குடும்ப தேவைகளை ஓரளவுக்கு பூர்த்தி செய்து வருகின்றனர்.குறிப்பாக விவசாயிகள் கட்டட வேலைக்கு சென்று தினமும் 150 முதல்250 ரூபாய் வரை சம்பாதித்து வருகின் றனர்.சிலர் இரும்பு, மளிகை போன்ற பல்வேறு கடைகளில் தற்காலிக வேலைக்கும் சென்று வருகின்றனர். இந்தாண்டு திருத்தணி தாலுகாவில் சுத்தமாக மழை இல்லாததால், கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு

ஏற்பட்டுள்ளது.திருத்தணி பகுதியில் குடிநீர் பற்றாக்குறையால் பணம் கொடுத்து தண்ணீர் வாங்கி உபயோகப்படுத்தி வருகின்றனர்.

**நடப்பாண்டு ரூ.25 கோடி பயிர்க்கடன் பெரம்பலூர் கலெக்டர் தகவல்**

பெரம்பலூர்: ""பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பாண்டு பயிர்க்கடனாக 25 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது,'' என கோனேரிபாளையம் கிராமத்தில் நடந்த சிறப்பு மனுநீதி நிறைவு நாள் முகாமில், கலெக்டர் விஜயகுமார் தெரிவித்தார்.பெரம்பலூர் மாவட்டம் கோனேரிப்பாளையம் கிராமத்தில் நேற்று நடந்த சிறப்பு மனுநீதி நிறைவு நாள் முகாமில் மக்களிடமிருந்து மனுக்களை பெற்று கலெக்டர் விஜயகுமார் பேசியதாவது:முதல்வர் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு பதவியேற்ற உடனே ஏழாயிரம் கோடி ரூபாய் விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்து அவர்களின் வாழ்வில் ஒளி மலர செய்தார்.

விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட பெரம்பலூர் மாவட்டத்திற்கு பயிர் கடனாக வழங்குவதற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த பயிர்க்கடன் கூட்டுறவுத்துறை மூலமாக தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் வழியாக விவசாயிகளுக்கு நடப்பாண்டில் வழங்கப்படும். நிலவள வங்கி மூலம் 27 லட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய சிறுபாசன கடன் வழங்கப்படவுள்ளது. இதை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மகளிர் திட்டத்தின்கீழ் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் ஒரு கோடியே 78 லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது.

தமிழக முதல்வரின் சிறப்பு திட்டமான உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டு திட்டத்தின்கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் இதுவரை ஆயிரத்து 520 நபர்களுக்கு மூன்று கோடியே 45 லட்சம் மதிப்பீட்டில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோனேரிபாளையம் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றுவதற்கான பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க அரசுக்கு கருத்துரு அனுப்பிடவும், பிரதான சாலையில் வேகத்தடை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வரும் டிசம்பர் இறுதிக்குள் கோனேரிப்பாளையம் கிராமத்தில் கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் தடையின்றி வழங்கப்படும். இன்றைய தினம் பெறப்பட்ட அனைத்து மனுக்களும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் பரிசீலனை செய்யப்பட்டு 15 நாட்களுக்குள் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.இவ்வாறு கலெக்டர் பேசினார்.

முகாமில், 85 பேருக்கு 12 லட்சத்து 51 ஆயிரத்து 386 ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவியை கலெக்டர் விஜயகுமார் வழங்கினார்.பெரம்பலூர் எம்.எல்.ஏ., ராஜ்குமார், டி.ஆர்.ஓ., பழனிசாமி, மகளிர் திட்ட அலுவலர் தெய்வநாயகி, கலெக்டரின் நேர்முக உதவியாளர்கள் தமிழரசி, ராஜராஜசோழன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கண்ணதாசன், தாட்கோ மாவட்ட மேலாளர் இன்பசேகரன், பஞ்சாயத்து தலைவர் சாந்தாதேவி உட்பட பலர் பங்கேற்றனர். முன்னதாக ஆர்.டி.ஓ., பாலுசாமி வரவேற்றார்.பெரம்பலூர் தாசில்தார் கார்த்திக்கேயன் நன்றி கூறினார்.

**வேளாண் திட்டங்களுக்கு ரூ.61 லட்சம் நிதி ஒதுக்கீடு: உதவி இயக்குனர் தகவல்**

தர்மபுரி: ""பாலக்கோடு வட்டாரத்தில் வேளாண் மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த மத்திய சார்பு திட்டங்களுக்கு 61 லட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது," என வேளாண் உதவி இயக்குனர் மேகநாதன் தெரிவித்தார்.பாலக்கோட்டில் பயறு வகை எண்ணெய்வித்து, மழைநீர் சேகரிப்பு, தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு முகாம் கலெக்டரின் நேர்முக உதவியாளர் பாலசுப்பிரமணியன் தலைமையில் நடந்தது. வேளாண் அலுவலர் இளையராஜா வரவேற்றார். வேளாண் திட்டங்கள் குறித்து வேளாண் உதவி இயக்குனர் மேகநாதன் பேசியதாவது:மத்திய சார்பு திட்டங்கள் மற்றும் மத்திய திட்டங்களான ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம், ஐசோபாம் எண்ணெய்வித்து, மக்காச்சோளம், தேசிய உணவு பாதுகாப்பு திட்டம், பருத்தி மினிமிஷன் திட்டம், தென்னை வளர்ச்சி திட்டம், விதை கிராமத்திட்டம் ஆகியற்றை செயல்படுத்த பாலக்கோடு வட்டாரத்துக்கு 61 லட்ச ரூபாய் நிதி இலக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களில் விதை உற்பத்தி, விதை விநியோகம், நுண்ணுயிர் விநியோகம், நுண்ணூட்டசத்து, ஜிப்சம் உயிரியல் பூச்சிகொல்லிகள், பெருவிளக்க பண்ணை, பாசனநீர் கொண்டு செல்லும் குழாய் அமைத்தல், பயிர் பாதுகாப்பு கருவிகள் ஆகியவற்றுக்கு மானிம் வழங்கப்படுவதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.கலெக்டரின் நேர்முக உதவியாளர் பாலசுப்பிரமணியன் இத்திட்டத்துக்கான இடுபொருட்களை மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கினார்.ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் சின்னதுரை, சிவக்குமார், பச்சமுத்து, கோவிந்தன், உதவி விதை அலுவலர் செல்வம், திரைப்பட கருவி இயக்குனர் ராமகிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

**ரூ. 17 கோடியில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை சீரமைப்பு: நபார்டு வங்கி திட்டத்துக்கு அரசு அனுமதி**

கோபிசெட்டிபாளையம்:கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்களை சீரமைக்க, 17 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பிலான நபார்டு வங்கி திட்டத்துக்கு, தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்தாண்டு ஜனவரி மாதம் இரண்டாவது வாரத்தில் பணிகள் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் அணையில் இருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் கொடிவேரி அணை உள்ளது. 17ம் நூற்றாண்டில் மைசூரு அரசர்களால் கட்டப்பட்ட கொடிவேரி அணையின் நீர்ப்பிடிப்பு பரப்பு 1,900 மைல்கள். இப்பரப்பில் இருந்து விநாடிக்கு ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 66 கன அடி தண்ணீர் வரும்

வகையில் வடிமைக்கப்பட்டுள்ளது. 1948-49ல் அணையின் முழு நீளத்துக்கு வீழ் கதவுகள் இரண்டு அடி உயரத்துக்கு பொருத்தப்பட்டன. சமீபத்தில் இதன் உயரம் இரண்டரை அடியாக உயர்த்தப்பட்டது.

அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி கால்வாய் மூலம் 24 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. 32 கிலோ மீட்டர் நீளமுள்ள அரக்கன்கோட்டை வாய்க்காலில் 207 மதகுகளும், 77 கிலோ மீட்டர் நீளமுள்ள தடப்பள்ளி வாய்க்காலில் 448 மதகுகளும் உள்ளன. பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த கொடிவேரி அணையில் இருந்து செல்லும் அரக்கன் கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்காலில் கிளை மற்றும் உபக்கிளை வாய்க்காலும் உள்ளன.

பல ஆண்டுகளாக சாகுபடி தண்ணீர் திறக்கப்படும் சமயங்களில், இக்கால்வாய்களின், மதகுகள், மண் நீக்கிகள் அவ்வப்போது சரி செய்யப்பட்டது. முழுமையாக வாய்க்கால்கள், மதகுகளை சீரமைக்க வேண்டும் என, விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இதையடுத்து, பொதுப்பணித் துறை சார்பில் நபார்டு வங்கி உதவியுடன் 17 கோடியே 42 லட்ச மதிப்பில் திட்டம் தயார் செய்யப்பட்டு, தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்த திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு தற்போது ஒப்புதல் அளித்துள்ளது.

வழக்கமாக இரண்டாம் போக சாகுபடி முடியும் தருவாயில், ஃபிப்ரவரி மாதம் 15ம் தேதி தண்ணீர் நிறுத்தப்படும். சீரமைப்பு திட்டத்தை செயல்படுத்த இந்தாண்டு டிசம்பர் மாதமே தண்ணீரை நிறுத்த பொதுப்பணி துறையினர் ஆலோசித்து வந்தனர். ஆனால், டிசம்பர் மாதம் இரண்டாம் போக சாகுபடிக்கான இறுதி பணி நடக்கும் என்பதால், அடுத்தாண்டு ஜனவரி மாதம் 15ம் தேதி தண்ணீரை நிறுத்தி விட்டு, சீரமைப்பு பணிகளை துவங்க கருத்து கேட்பு கூட்டத்தில் விவசாயிகள் ஒப்புதல் அளித்துள்ளதாக பொதுப்பணி துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

"காலைக்கதிர்' செய்தி எதிரொலி: "கொடிவேரி அணையில் உள்ள பழுதடைந்துள்ள அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன வாய்க்கால்கள், ஷட்டர்கள், மதகுகளை சீரமைக்க வேண்டும்' என, "காலைக்கதிர்' நாளிதழ் பல முறை சுட்டிக்காட்டியது.இதன்பேரில், "நபார்டு' வங்கி திட்டத்தின் கீழ் 17 கோடி செலவில் சீரமைப்பு திட்ட மதிப்பீடு தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.தற்போது அரசும் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**விலைவாசி உயர்வை கண்டித்து தே.மு.தி.க., பொதுக்கூட்டம்**

பாபநாசம்: பாபநாசத்தில் தே.மு.தி.க., சார்பில் விலை உயர்வு கண்டித்து கண்டன பொதுக்கூட்டம் நடந்தது.பாபநாசம் கீழ வீதியில் காவிரி டெல்டா விவசாயத்துக்கு உரிய நேரத்தில் தண்ணீர் பெற்றுத்தராத மத்திய, மாநில அரசுகளின் மெத்தனப் போக்கை கண்டித்தும், பெட்ரோல், டீஸல் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கண்டித்து பாபநாசம் தொகுதி தே.மு.தி.க., சார்பில் கண்டன பொதுகூட்டம் தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர் மருதையன் தலைமையில் நடந்தது.பாபநாசம் நகர செயலாளர் சங்கர் வரவேற்றார். மாவட்ட துணைச் செயலாளர் மணிகண்டன், பாபநாசம் தொகுதி பொறுப்பாளர் பாண்டியன், பாபநாசம் ஒன்றிய செயலாளர் மைக்கல்ராஜ், அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில கொள்கை பரப்பு செயலாளர் சந்திரகுமார் பேசுகையில், ""தமிழகத்தில் தி.மு.க., ஆட்சியில் அனைத்து பொருட்களின் விலைவாசியும் விண்ணைத் தொடும் அளவுக்கு உயர்ந்துள்ளது. காவிரி டெல்டா விவசாயத்துக்கு உரிய நேரத்தில் தண்ணீர் பெற்றுத் தராமல் மத்திய, மாநில் அரசுகள் வேடிக்கை பார்த்து கொண்டுள்ளது. மத்திய அரசின் பெட்ரோல், டீசல் உயர்வால் நாட்டின் பொருளாதாரமே சீரழிந்து வருகிறது. மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சீர் கெட்டுள்ளது,'' என்றார்.நிர்வாகிகள் மாதவன், மகேஷ், பழனிசாமி, செல்வம், பாலாஜி மற்றும் பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகளின் மஞ்சள் மோகத்தால் நெல் விலை உயர்வு**

கோபிசெட்டிபாளையம்:மஞ்சள் விலை உயர்ந்ததால் கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதி விவசாயிகள் மஞ்சள் சாகுபடியை அதிகப்படுத்தினர். நெல் சாகுபடி பரப்பளவு கணிசமாக குறைந்ததால், நெல் விலை உயர்ந்துள்ளது.அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, கீழ்பவானி, குண்டேரிப்பள்ளம் அணை பாசனப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நெல் முதன்மையாக பயிரிடப்பட்டு வந்தது.நெல்லுக்கு அடுத்தபடியாக கரும்பு, வாழை, மஞ்சள் பயிர்களை விவசாயிகள் பயிரிடுவது வழக்கம். 2009 துவக்கத்தில் இருந்து மஞ்சள் விலை படிப்படியாக அதிகரித்தது. ஒரு கட்டத்தில் குவிண்டால் மஞ்சள் விலை 17 ஆயிரம் ரூபாயை நெருங்கியது. இதனால், கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் நெல்லுக்கு இணையாக மஞ்சள் பயிரிடத் துவங்கினர்.

சென்றாண்டு இரண்டாம் போகத்திலேயே மஞ்சளை விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டனர். நெல் பயிரிடும் விவசாய பரப்பளவு கணிசமாக குறைந்தது.நெல்லுக்கு தேவை அதிகரித்ததால், விவசாயிகளை நேரடியாக தேடிச் சென்று, வியாபாரிகள் நெல்லை வாங்கினர். இதனால், இரண்டாம் போக சாகுபடி முடிவில் கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் அமைக்கப்பட்ட அரசு கொள்முதல் நிலையங்களில் கூட எதிர்பார்த்தளவு நெல் வரவில்லை. இந்நிலையில், நெல் சாகுபடி குறைவால் தற்போது விலை அதிகரித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் டீலக்ஸ் பொன்னி நெல் ஒரு பொதி (264 கிலோ) 3,300 ரூபாய் வரை விற்றது. தற்போது 3,800 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. ஏ.பி.டி., 2,500 ரூபாயில் இருந்து 3,000 ரூபாய்க்கும், ஏ.எஸ்.டி., இட்லி குண்டு நெல் ரகத்தின் விலை ஒரே சீராக இல்லாமல் ஏற்றமும் இறக்கமுமாக உள்ளது.கர்நாடகா டீலக்ஸ் நெல் ஒரு கிலோ 14 ரூபாயிலிருந்து 19.50 ரூபாயாக விலை உயர்ந்துள்ளது.

நெல் விலை உயர்வால் கர்நாடகா டீலக்ஸ் அரிசி 75 கிலோ மூட்டை 2,000 ரூபாயில் இருந்து 2,100 ரூபாய்க்கும், டீலக்ஸ் 1,800 லிருந்து 2,150 ரூபாய்க்கும், ஏ.டி.டி., 1400 ரூபாயில் இருந்து 1,550 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பகுதிகளில் கடந்த இரண்டாம் போகத்தில் நெல் சாகுபடி பரப்பளவு குறைந்ததாலும், தஞ்சை வட்டாரத்தில் பயிரிடப்பட்ட நெல் வகைகள், வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டதாலும், நெல் விலை தற்போது உயர்ந்துள்ளது.

**சின்ன வெங்காயம் பயிரிட வேளாண் பல்கலை பரிந்துரை**

கோவை: "விவசாயிகள், சின்ன வெங்காயம்பயிரிடலாம்' என, வேளாண் பல்கலை பரிந்துரைக்கிறது. கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலை அறிக்கை:நாட்டின் மொத்த காய்கறி உற்பத்தியில் வெங்காயம் 10.5 சதவீதம் பங்கு வகிக்கிறது. தேசிய தோட்டக்கலை வாரியத்தின் கணக்கீடு படி, இந்தியா 2008 - 09ம் ஆண்டில் 135.65 லட்சம் டன்கள் வெங்காயத்தை 8.34 லட்சம் எக்டரில் உற்பத்தி செய்தது.மகாராஷ்டிரா மாநிலம், வெங்காய உற்பத்தியில் 28.9 சதவீதத்தை உற்பத்தி செய்து முன்னிலையில் உள்ளது. கர்நாடகா 22.35 சதவீதம், குஜராத் 10.39 சதவீதம், மத்தியப்பிரதேசம் 6.5 சதவீதம், ஆந்திரா 4.88 சதவீதம், ராஜஸ்தான் 2.72 சதவீதம், அரியானா 2.56 சதவீதம் வெங்காயத்தை உற்பத்தி செய்துள்ளன. இந்தியா 2009-10ம் ஆண்டில் 18.73 லட்சம் டன்கள் வெங்காயத்தை ஏற்றுமதி செய்தது. உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சின்ன,பெரிய வெங்காயத்தை உள்ளடக்கியதாகும். தமிழகம் 3.05 லட்சம் டன்கள் வெங்காயத்தை 0.35 லட்சம் எக்டரில் உற்பத்தி செய்தது. பெரம்பலூர் 24.6 சதவீதம் வெங்காயத்தை உற்பத்தி செய்து முன்னிலையில் உள்ளது. திருச்சி14.2 சதவீதம், கோவை13.7 சதவீதம், ஈரோடு 10.8 சதவீதம் வெங்காயத்தை உற்பத்தி செய்துள்ளன. உற்பத்தியில் சின்ன வெங்காயம் 75 சதவீதம் பங்களிக்கிறது. 2010ம் ஆண்டு மே மாதத்தில் கிலோ 12 ரூபாய்க்கு விற்ற சின்ன வெங்காயம், ஜூன் மாதத்தில் கிலோ 16 ரூபாய் வரை விற்றது. தமிழக விவசாயிகள் வரும் பருவத்தில் வெங்காய விதைப்பு முடிவுகளை எடுக்க வேண்டிய தருணத்தில் உள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலையில் இயங்கி வரும் தேசிய வேளாண்மை புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், கடந்த 10 ஆண்டுகளின் விலை நிலவரத்தை ஆய்வு செய்தது. மேலும், திண்டுக்கல் மற்றும் ஒட்டன் சத்திரம் சந்தைகளில் ஆய்வு நடத்தியது. நாட்டின் மொத்த வெங்காய உற்பத்தியில் கர்நாடகா இரண்டாம் இடம் வகிக்கிறது. வர்த்தக மூலங்களின் படி மே, ஜூன், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் கர்நாடகா வரத்துக்கள் இருக்கும். கர்நாடக மாநிலம் முக்கிய போட்டியாளராக இருப்பதால், தமிழகத்தின் வெங்காய விலையை கர்நாடக வரத்து பாதிக்கும். தற்போது விதைக்கும் பயிர் அக்டோபர்- நவம்பர் மாதத்தில் அறுவடைக்கு வரும். அதேசமயம் பருவமழையும் விலையை நிர்ணயிக்கும் முக்கிய காரணி. அக்டோபர், நவம்பர் மாதத்தில் மழை இருந்தபோதும், விழாக்கால தேவை, கர்நாடக வரத்துக்கள் முடிவடைதல் மற்றும் ஏற்றமதி தேவை ஆகிய காரணிகளால் விலை ஏறுமுகத்தில்
இருக்கும். உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய ஆய்வு முடிவுகளும் நல்ல தரமான வெங்காயத்தின் லை வரும் அக்டோபர் முதல் நவம்பர் வரை கிலோவுக்கு ரூ.13 - 16 வரை இருக்கும் எனவும், சுமாரான ரகம் ரூ.10 - 13 வரை இருக்கும் என கணித்துள்ளது. விவசாயிகள் ஜூலை மாதத்தில் வெங்காயம் விதைக்க சிபாரிசு செய்யப்படுகின்றனர். மேலும், விதை மூலம் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தை விதைத்தால் பயிர் செலவு குறையும். ஆனால், இந்த வெங்காயம் சேமிக்க உகந்ததல்ல. இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**வங்கிகளில் உரங்கள் வாங்க விவசாயத்துறை அழைப்பு**

சின்னமனூர் : சின்னமனூர் பகுதியில் நெல் சாகுபடி செய்திருக் கும் விவசாயிகள், தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகளில் உரங்களை வாங்கிக் கொள்ள விவசாயத்துறை அழைப்பு விடுத்துள்ளது.

விவசாயத்துறை உதவி இயக்குநர் நஹீப் கூறுகையில் " குச்சனூர், மார்க்கையன் கோட்டை உட்பட பகுதிகளில் நடவு தீவிரமாக நடந்து வருகிறது. நடவின் போது அடியுரம் போட வேண்டும். குச்சனூர், சின்னமனூர் உட்பட அனைத்து கிராமங்களிலும் உள்ள தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகளில் டி.ஏ.பி., பொட்டாஷ், யூரியா, காம்ப்ளக்ஸ் உட்பட உரங்கள் தேவையான அளவு இருப்பு வைக்கப் பட் டுள்ளது. விவசாயிகள் தொடக்க கூட்டுறவு வங்கிகளில் உரங்களை வாங்கி பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு கூறினார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

ஆண்டிபட்டி : வறட்சியான பகுதிகளில் கால்நடை பராமரிப்பு மேம்பாடு குறித்து விவசாயிகளுக்கான இரண்டு நாள் பட்டறிவு பயிற்சி ஆண்டிபட்டியில் நடந்தது.

தமிழ்நாடு நீர் வள நில வள திட்டத்தில் முதுகுளத்தூர் உத்திரகோசமங்களாறு உப வடிநிலப்பகுதி விவசாயிகள் கலந்து கொண்ட முகாமில் பரமக்குடி கோட்ட கால்நடை உதவி இயக்குனர் பாலகிருஷ்ணன், கால்நடை உதவி டாக்டர் சுந்தரமூர்த்தி பயிற்சி அளித்தனர். வறட்சியான பகுதிகளில் குறைந்த எண்ணிக்கையில் கால்நடைகள் வைத்து பராமரிப்பவர்களுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் பராமரிப்பு முறைகள் பற்றி விளக்கப்பட்டது. தீவன புல் வளர்ப்பு, கால்நடைகள் மேம்பாடு குறித்து கோத்தலூத்து, ஜம்புலிபுத்தூர், ஆண்டிபட்டி, கண்டமனூர், கடமலைக்குண்டு பகுதி விவசாயிகளுடன் பயிற்சி பெற வந்த விவசாயிகள் ஆலோசனை நடத்தினர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.550 கோடியில் உணவுப் பொருள் பதப்படுத்தும் சிறப்பு பொருளாதார மண்டலம் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து*

*சென்னை, ஜூலை.17–*
*தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.550 கோடியில் உணவுப் பொருள் பதப்படுத்தும் சிறப்பு*

பொருளாதார மண்டலம் அமைக்க துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:–
பொருளாதார மண்டலம்
தமிழக துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழக அரசின் 2010–ம் ஆண்டு தொழில் துறை மானியக் கோரிக்கையின்போது தென் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு, தூத்துக்குடி மாவட்டத்தில் உணவுப் பொருள் பதப்படுத்தும் சிறப்பு பொருளாதார மண்டலம் ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்தார்.
அதன் அடிப்படையில் தூத்துக்குடி மாவட்டம், வடக்கு கரசேரி மற்றும் திம்மராஜபுரம் கிராமங்களில் சுமார் 425 ஏக்கர் பரப்பளவில் உணவுப் பொருள் பதப்படுத்தும் சிறப்பு பொருளாதார மண்டலம் ஒன்றை உருவாக்குவதற்கு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) மற்றும் சி.சி.சி.எல். இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட் (சி.ஐ.எல்.) ஆகிய நிறுவனங்களுக்கிடையேயான கூட்டுத் துறை ஒப்பந்தம், தமிழக துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று கையெழுத்தானது.
ரூ.550 கோடி செலவில்
சி.ஐ.எல். தெரிவித்துள்ளபடி, இத்திட்டத்திற்கான கட்டுமான வசதிகளை உருவாக்க மொத்த மதிப்பீடு ரூ.550 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் ரூ.2500 கோடி அளவிற்கு முதலீடுகள் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஏறத்தாழ 10 ஆயிரம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.சிறப்பு பொருளாதார மண்டலத்தில் அமையும் உணவு பதப்படுத்தும் திட்டத்தை சுமார் 294 ஏக்கர் நிலப்பரப்பளவில் செயற்படுத்த மத்திய அரசின் முறையான அறிக்கை பெறப்பட்டுள்ளது. இந்த சிறப்பு பொருளாதார மண்டலத்தை உலகத்தரம் வாய்ந்த வசதிகளை கொண்டதாக உருவாக்கி, தேசிய மற்றும் உலகளாவிய நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஏதுவாக அமைக்கப்படும். இத்திட்டத்திற்கான பெருந்திட்டத்தை அமெரிக்காவைச் சேர்ந்த பொறியியல் ஆலோசகர்கள் தயார் செய்துள்ளனர்.
ஒப்பந்தம் கையெழுத்து
துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று கையெழுத்தான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் டிட்கோ தலைவர் ராஜீவ் ரஞ்சன், சி.ஐ.எல். மற்றும் சி.சி.சி.எல். பியர்ல் சிட்டி புட் போர்ட் லிமிடெட் சார்பில் அவற்றின் தலைவர் ஆர்.சரபேஸ்வர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பாமாயில், சோயா எண்ணெய் உள்ளிட்ட சமையல் எண்ணெய் இறக்குமதி 6% சரிவு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
மும்பை
சென்ற ஜூன் மாதத்தில் நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி 6 சதவீதம் சரிவடைந்து 7.32 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 7.81 லட்சம் டன்னாக இருந்தது.
கையிருப்பு
உள்நாட்டில் கையிருப்பு அதிகரித்துள்ளதால் சமையல் எண்ணெய் இறக்குமதியை நிறுவனங்கள் குறைத்துக் கொண்டுள்ளதாக தெரிகிறது. ஜூன் மாதம் 1–ந் தேதி நிலவரப்படி, நம் நாட்டில் சமையல் எண்ணெய் கையிருப்பு 10.75 லட்சம் டன்னாக இருந்தது. இது, இம்மாதம் 1–ந் தேதியன்று 11.10 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது என எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எனினும் வரும் அக்டோபர் மாதத்துடன் நிறைவடையும் காலாண்டில் சமையல் எண்ணெய் இறக்குமதி 24 சதவீதம் உயர்ந்து 26 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பண்டிகை காலத்தில் பயன்பாடு மிகவும் உயர்வதே இதற்கு காரணமாகும்.
ஜூன் மாதத்தில் நாட்டின் கச்சா பாமாயில் இறக்குமதி 19 சதவீதம் உயர்ந்து 4.21 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. 1.93 லட்சம் டன் சோயா எண்ணெயும், 34,559 டன் சூரியகாந்தி எண்ணெயும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.
அக்டோபர் வரை, மாதந்தோறும் சமையல் எண்ணெய் இறக்குமதி சராசரியாக 5 லட்சம் டன்னுக்கும் அதிகமான அளவில் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் சோயா எண்ணெய் மட்டும் 2 முதல் 2.50 லட்சம் டன்னாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. சென்ற ஆண்டு நவம்பர் முதல் நடப்பாண்டு ஜூன் வரையிலான 8 மாத காலத்தில் சுமார் 56 லட்சம் டன் சமையல் எண்ணெய் இறக்குமதி ஆகியுள்ளது. இதில் பாமாயில் மட்டும் 80 சதவீதமாகும்.
ரூ.32,000 கோடி
நடப்பு 2009–10–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நம் நாட்டில் சமையல் எண்ணெய் இறக்குமதி, மதிப்பின் அடிப்படையில் 14 சதவீதம் அதிகரித்து ரூ.32,000 கோடி மதிப்பிற்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த முந்தைய பருவத்தில் ரூ.28,000 கோடியாக இருந்தது. உள்நாட்டில் உற்பத்தி சற்று தேக்கம் அடைந்துள்ள நிலையில்,

*தேவைப்பாடு அதிகமாக உள்ளதே இதற்கு முக்கிய காரணமாகும். சமையல் எண்ணெயை பொறுத்தவரை, நம் நாடு கடந்த 1994–95–ஆம் ஆண்டு பருவத்தில் 5 சதவீதமே இறக்குமதியை சார்ந்திருந்தது. இது, தற்போது 50 சதவீதமாக உயர்ந்துள்ளது.*

## கோதுமை இறக்குமதிக்கு வரி விதிக்க பரிசீலனை

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*கோதுமை இறக்குமதி மீது வரி விதிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது. மத்திய அமைச்சர்களின் சிறப்புக் குழு ஒன்று இது குறித்து முடிவு எடுக்கும் என மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.*
*மதிப்பீடுகளுக்கு மாறாக தற்போது பருவமழை குறைவாகவே இருந்து வருகிறது. எனினும், இதனால் நாட்டின் வேளாண் உற்பத்தி பாதிக்கப்படாது என்று அவர் மேலும் கூறினார்.*
*சென்ற ஆண்டில் தென்மேற்கு பருவமழை பொய்த்ததால், நாட்டில் பல பகுதிகள் வறட்சிக்கு இலக்காயின. நடப்பு ஆண்டில், மழை நன்றாக இருக்கும் என்றும், உணவு தானியங்கள் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என்றும் முன்னர் மதிப்பீடுகள் வெளியாயின. இந்நிலையில், சென்ற வாரத்தில் சராசரி அளவை விட 24 சதவீதம் குறைவாகவே மழை பெய்துள்ளது. வரும் வாரத்திலும் போதிய அளவு மழை கிடைக்க வாய்ப்பில்லை என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.*
*அடுத்த சில வாரங்களில் பருவமழை நிலவரம் நன்கு இருக்குமானால், நடப்பு ஆண்டில் வேளாண் உற்பத்தி முந்தைய மதிப்பீடுகளுக்கு இணையாக இருக்கும். இன்றைய நிலையில் குறைவாகவே மழை பெய்துள்ளதால், நாட்டின் சில பகுதிகளில் உணவு தானியங்கள் மகசூல் சரிவடையும் என்ற மதிப்பீடும் உள்ளது.*